தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.200/மா/2019
நாள். 29.01.2022

திரு. A.ஆல்ட்ரின் ஜெபராஜ்,
சென்னை – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, புளியந்தோப்பு, கன்னிகாபுரம், பிரைட்டன்ஸ் சாலையில் எண்.29/9,–ல் வசித்த திரு.A.ஆல்ட்ரின் ஜெபராஜ் என்பவரின் 25.11.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.11.2019–ல் பெறப்பட்டு 200/மா/2019 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, புளியந்தோப்பு, கன்னிகாபுரம், பிரைட்டன்ஸ் சாலை, எண்.29/9,–ல் வசித்த திரு.A.ஆல்ட்ரின் ஜெபராஜ் என்பவர் தனது 25.11.2019 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

" We request to take action against unauthorized parking happened in our Brightens road, Government Boys Higher Secondary School. In night day time some of the vehicles specially four wheelers three wheelers which not belongs to our street are parked in that school compound, due to this, wastages, garbages arrested under the vehicle, morning time Corporation sweepers unable to clean that area night time some drinkers are used to vehicles beside vehicle places used to drink alcohol this may create public nuisance to those who are living that street, some of them used that place like urinals area it may cause to unsanitary condition in that place so we request you to kindly take action against vehicle parking, always maintain clean hygienic if possible make planting some trees maintaining

like a garden in that school compound area it helpful to that school. We also given many complaints to Chennai Corporation but they are not taking proper action without proper reason closed the petition.

2) இப்புகார் மனு தொடர்பான அறிக்கையை அனுப்புமாறு 09.12.2019 நாளிட்ட கடிதம் மூலம் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் மண்டல அலுவலரிடமிருந்து மேற்கண்ட அறிக்கை இம்முறை மன்றத்தால் பெறப்படாத நிலையில், முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோரை 25/01/2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.01.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) இம்முறைமன்றத்தால் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட மேற்கண்ட அழைப்பாணை, மனுதாரர் Deceased என்ற தபால் அலுவலக முத்திரையுடன் இம்முறைமன்றத்தால் திரும்பப் பெறப்பட்டது. எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் –6ஐச் சேர்ந்த உதவிபொறியாளர் 25.01.2022 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“ மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை புளியந்தோப்பு கன்னிகாபுரம் பிரைட்டன் ரோடு பகுதியில் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதா (unauthorized parking) எனவும் மேலும் வாகனம் நிறுத்தப்பட்ட பகுதிகளில் குப்பைகள் சேர்ந்துள்ளனவா எனவும் என்னால் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. அங்கு ஒரு சில வாகனங்கள் நிறுத்தம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் செய்து, மேற்கண்ட பிரைட்டன் ரோடு பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களை அகற்ற உரிய Notice வழங்கி தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேலும், அங்கு நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களுக்கு அருகில் தேங்கும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றிடவும் அப்பகுதியில் அசுத்தம் ஏற்படாமல் பாதுகாத்திடவும், தேவையான நடவடிக்கை உடன் எடுக்கப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக மனுதாரரின் மனு, மற்றும் உதவி பொறியாளர், மண்டலம்–6 அவர்களின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. 09.12.2019 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரரின் மனு மண்டல அலுவலர், மண்டலம்–6க்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் மண்டல அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு மனு தொடர்பான அறிக்கையை அனுப்பாததோடு 2019–ல் இருந்து இம்மனு மீது எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இச்செயல் மண்டல நிர்வாகத்தின் மெத்தனப்போக்கை காட்டுவதாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே 2019–லிருந்து மனுவின் மீது நடவடிக்கை ஏதும் எடுக்காத சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு பரிந்துரைத்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் உதவி பொறியாளர், மண்டலம்–6 அவர்கள் தமது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் செய்து, மேற்கண்ட பிரைட்டன்ஸ் சாலை பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களை அகற்ற உரிய Notice வழங்கி தேவையான நடவடிக்கை எடுத்திடவும் மேலும் அங்கு நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களுக்கு அருகில் தேங்கும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றிடவும் அப்பகுதியில்

அசுத்தம் ஏற்படாமல் பாதுகாத்திடவும், தேவையான நடவடிக்கை எடுத்திட மண்டல அலுவலர், மண்டலம்–6 அவர்களை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2022–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1)திரு.A.ஆல்ட்ரின் ஜெபராஜ்,
எண்.29/9, பிரைட்டன் ரோடு,
கன்னிகாபுரம்,
சென்னை – 600 012.

2)ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

3)மண்டல அலுவலர், மண்டலம்–6,
பெருநகர சென்னை மாநகராட்சி,
158, ஸ்ட்ராஹன்ஸ் ரோடு,
ஓட்டேரி,
சென்னை – 600 012.

4)கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

நகல். மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
நகல். இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக